பக்கங்கள் 15+ 03

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | தை 08 வியாழக்கிழமை 22.01.2026 | அதிர்வு 176

## கிழக்கில் நிறைவுக்கு வந்தது வைத்தியர்களின் போராட்டம்

### நோயாளர் பராமரிப்பு சேவைகள் வழமைக்கு



கிழக்கு மாகாணத்தில் வைத்தியர்கள் முன்னெடுத்த பணிப்புறக் கணிப்பு நடவடிக்கை இன்று முதல் நிறைவுக்கு

02

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# கிவுல் ஓயாத் திட்டத்துக்கு தமிழர்கள் கடும் எதிர்ப்பு!

## ஏனைய கட்சிகளையும் சேர்த்துக்கொண்டு களத்தில் இறங்குகின்றது தமிழரசுக் கட்சி

(எஸ்.நிதர்ஷன்)

"தமிழரின் இனப்பரம்பலையே மாற்றியமைக்கும் கிவுல் ஓயாத் திட்ட அமுலாக்கலைத் தடுக்கும் வகையில் பாரிய எதிர்ப்புப் போராட்டங்களை நாம் நடத்தவுள்ளோம். இந்தப் போராட்டங்களில் எம்மோடு இணைந்து கொள்ளுமாறு மற்றைய கட்சிகளையும் கேட்டுக்கொள்கின்றோம்."

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் இன்று விடுத்துள்ள அறிக்கையில்,

'கடந்த திங்கட்கிழமை 20ஆம் 02

# அரசமைப்புக் கவுன்ஸில் சிறீதரன் அரசுக்கு முண்டு கொடுப்பது ஏன்?




## சபையில் தயாசிறி காட்டமாகக் கேள்வி

அரசமைப்புக் கவுன்ஸில் சிறுபான்மைக் கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், தமிழ் மக்களின் ஆணையை மீறி அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரல்களை நிறைவேற்றி வருகின்றார் என்று எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர இன்று நாடாளுமன்றத்தில் பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டினார். 02



### இந்தியக் குடியரசு தின நிகழ்வில் பங்கேற்க

# நாமல் எம்.பி. தலைமையில் 'மொட்டு' ஒடிசா பயணம்!

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தலைமையிலான அந்தக் கட்சியின் உறுப்பினர்கள் குழுவொன்று இந்தியாவின் குடியரசு தின நிகழ்வுகளில் பங்கேற்பதற்காக ஒடிசாவுக்கு விஜயம் மேற்கொள்கின்றது.

எதிர்வரும் 26 ஆம் திகதி நடைபெறவுள்ள இந்தியக் குடியரசு தின நிகழ்வில் பங்கேற்பதற்கு, இந்திய அரசாங்கம், இலங்கையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சிக்கும் அழைப்பு விடுத்துள்ளது.

இந்த அழைப்பை ஏற்று மொட்டுக் கட்சியின் உறுப்பினர்களான நாமல் ராஜபக்ஷ, இந்திக அனுருத்த, சஞ்சீவ எதிரிமான்ன, சம்பத் அத்துகோரள மற்றும் மிலிந்த ராஜபக்ஷ உள்ளிட்டோரே இந்தியா செல்லவுள்ளனர்.

இந்தப் பயணத்தின் போது, உலகின் முன்னணி பேரிடர் முகாமைத்துவ நிறுவனங்களில் ஒன்றாகக் கருதப்படும் ஒடிசா பேரிடர் முகாமைத்துவ மையத்துக்கும் இந்தக் குழு கண்காணிப்புப் பயணத்தை மேற்கொள்ளவுள்ளது.

அசோக மன்னர் காலத்தைச் சேர்ந்த பௌத்த தொல்பொருள்களைப் பார்வையிடவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தப் பயணத்துக்கு முன்னதாக, இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜாவை, அவரது அதிகாரபூர்வ இல்லத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன குழுவினர் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

## கிவுல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திகதி அமைச்சரவை, கிவுல் ஓயாத் திட்டத்தை அனுமதி வழங்கியுள்ளது.

இந்தத் திட்டம் எப்படியாக இனப் பரம்பலை மாற்றி அமைக்கும் என்றும், தமிழ் மக்களின் உரிமைகளை எந்த அளவுக்குப் பாதிக்கும் என்பதையும் எமது நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் சத்தியலிங்கம் நேற்று நாடாளுமன்றத்தில் தெளிவாக விளக்கியுள்ளார்.

இந்தத் திட்ட அமுலாக்கலைத் தடுக்கும் வகையில் பாரிய எதிர்ப்புப் போராட்டங்களை நாம் நடத்தவுள்ளோம். இந்தப் போராட்டங்களில் எம்மோடு இணைந்து கொள்ளுமாறு மற்றைய கட்சிகளையும் கேட்டுக்கொள்கின்றோம்.

அடுத்தடுத்த நாட்களில் இது சம்பந்தமான கலந்துரையாடல்களை வவுனியாவில் நாம் நடத்தவுள்ளோம். இதில் கலந்துகொண்டு உங்களது கருத்துக்களையும் பகிர்ந்து இந்தப் போராட்டங்களுக்கு வலுச்சேர்க்குமாறு சகலரையும் அன்பாகக் கேட்டுக்கொள்கின்றோம்." - என்று குறிப்பிட்டுள்ளது.

## அரசமைப்புக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறீதரனின் செயற்பாடுகள் பாரிய சந்தேகங்களைத் தோற்றுவித்துள்ளன என்று சுட்டிக்காட்டிய அவர், சிறீதரன் உடனடியாக அரசமைப்புக் கவுன்ஸிலில் இருந்து பதவி விலக வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இராணுவ மயமாக்கலுக்கு ஆதரவு

அரசமைப்புக் கவுன்ஸிலில் சுயாதீனத் தன்மையைப் பாதுகாக்க வேண்டிய சிறீதரன், அதற்கு மாறாக அரசாங்கத்தின் விருப்பத்துக்கு இணங்கச் செயற்படுகின்றார் எனவும் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

குறிப்பாக, சிவில் நிர்வாகப் பதவிகளுக்கு இராணுவ அதிகாரிகளை நியமிக்கும் அரசாங்கத்தின் தீர்மானங்களுக்கு சிறீதரன் ஆதரவாக வாக்களித்துள்ளமையை அவர் சுட்டிக்காட்டினார்.

தமிழ் மக்களின் உரிமைகளைப் பற்றிப் பேசும் சிறீதரன், நாடாளுமன்றத்துக்குள் இராணுவ மயமாக்கலுக்குத் துணை போகின்றமை அந்த மக்களுக்குச் செய்யும் துரோகமாகும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

### 1.7 பில்லியன் டொலர் திட்டமும் 'சாரங்கன்' சர்ச்சையும்

இந்த அரசியல் நகர்வுகளுக்குப் பின்னால் பாரிய நிதி ஊழல் மறைந்திருப்பதாகவும் தயாசிறி ஜயசேகர சந்தேகம் வெளியிட்டார்.

சிறீதரனின் நெருங்கிய சகா எனக் கருதப்படும் 'சாரங்கன்' என்பவரின் ஊடாகப் பூநகரி சூரிய சக்தி மின் திட்டத்தில் கொடுக்கல் வாங்கல்கள் நடைபெறுகின்றன எனவும் அவர் குறிப்பிட்டார்.

சுமார் 1,727 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டில் முன்னெடுக்கப்படும் இந்த 700 மெகாவாட் திட்டத்துக்காகவே சிறீதரன் அரசாங்கத்தின் பக்கம் சாய்ந்துள்ளார் எனவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

இந்தவகையில் சிறீதரனின் வங்கிக் கணக்குக்கு 40 மில்லியன் ரூபாவும், சாரங்கனின் வங்கிக் கணக்குக்கு 30 மில்லியன் ரூபாவும் வைப்பிடப்பட்டுள்ளன எனவும் அவர் குற்றம் சுமத்தினார்.

### 8 முறை அரசுக்கு ஆதரவு

இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக் குழுவின் பணிப்பாளர் நாயகம் நியமனம் உட்பட சுமார் 8 முக்கிய சந்தர்ப்பங்களில் சிறீதரன் அரசாங்கத்துக்கு ஆதரவாக வாக்களித்துள்ளார் என்ற விவரங்களை தயாசிறி ஜயசேகர வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தார்.

"எதிரணியில் இருந்து கொண்டு அரசாங்கத்தின் 'காண்ட்ராக்ட்' எடுப்பவர்களை அரசமைப்புக் கவுன்ஸிலில் அனுமதிக்க முடியாது" எனவும் அவர் ஆவேசமாகத் தெரிவித்தார்.

### பதவி விலக வேண்டும்

இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு தமக்கு எதிராக விசாரணை நடத்துகையில், அதை மறைத்து அரசமைப்புக் கவுன்ஸிலில் அவர் உறுப்பினராகச் செயற்படுகின்றமை முறையற்றது என்றார் தயாசிறி.

சிறீதரன் இனியும் அந்தப் பதவியில் நீடிப்பதற்கு எவ்வித தார்மீக உரிமையும் இல்லை எனக் குறிப்பிட்ட தயாசிறி ஜயசேகர, அவர் உடனடியாகப் பதவி விலக வேண்டும் அல்லது சம்பந்தப்பட்ட கட்சி அவரைத் திரும்பப் பெற வேண்டும் எனவும் சபையில் வலியுறுத்தினார்.

## கிழக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வந்துள்ளது என்று அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்தச் சங்கம் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில்,

"குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியிருந்த அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகரை உடனடியாக அந்தப் பதவியில் இருந்து நீக்குவதற்கான கடிதத்தை சுகாதார அமைச்சின் செயலாளர் வெளியிட்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து, கிழக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்டு வந்த வைத்தியர்களின் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் இன்று நண்பகல் 2 மணியுடன் நிறைவுக்கு கொண்டுவரப்பட்டது.

அத்துடன் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் பதில் வைத்திய அத்தியட்சகராக டாக்டர் ஏ.பி.மசூத் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனம் உடன் அமுலுக்கு வரும் வகையில், சுகாதார மற்றும் ஊடக அமைச்சின் செயலாளர் வைத்தியர் அனில் ஜயசிங்கவினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது." - என்று குறிப்பிடப்பட்டுள்ளது.




# எம் மக்கள் நினைப்பதை செயலில் காட்டுகின்றோம்

## ஐ.நா. பிரதிநிதியிடம் பிரதமர் ஹரிணி தெரிவிப்பு

ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் பிரதிநிதி அலெக்சாண்டர் டி குரூவுடன் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய பேச்சு நடத்தியுள்ளார்.

இதன்போது இலங்கைக்கும், ஐ.நாவுக்கும் இடையிலான பலமான ஒத்துழைப்புக்கும், வெள்ள நிவாரணம் மற்றும் வாழ்வாதார உதவிகளில் ஐ.நா. வழங்கிய ஆதரவுக்கும் பிரதமர் நன்றி தெரிவித்துள்ளார்.

அத்துடன், நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் வழங்கிய ஆணையின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டு வரும் வேலைத்திட்டங்கள் தொடர்பிலும் பிரதமர் விளக்கமளித்துள்ளார்.

“பொதுமக்களின் நம்பிக்கை, நல்லாட்சி மற்றும் நலிவடைந்த சமூகங்களுக்கான பலப்படுத்தப்பட்ட சமூகப் பாதுகாப்பு ஆகியவற்றின் ஊடாகத் தேசம் கட்டியெழுப்படும்.

மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதில் எமது அரசு கவனம் செலுத்தி வருகின்றது.” – என்றும் ஐ.நா. பிரதிநிதியிடம் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

உலக பொருளாதாரமன்ற மாநாடு சுவிட்சர்லாந்தில் நடைபெற்று வருகின்றது.

இந்த மாநாட்டில் பங்கேற்றுள்ள பிரதமர் முக்கியத்துவம்மிக்க சந்திப்புகளை நடத்தி வருகின்றார். இதன் ஓர் அங்கமாகவே மேற்படி சந்திப்பு நேற்று இடம்பெற்றுள்ளது.











# அரசு நிர்ணயித்த விலையில் நெல் கொள்வனவு இல்லை!

## உடன் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சத்தியலிங்கம் எம்.பி. கோரிக்கை



அரசாங்கம் ஒரு கிலோகிராம் நெல்லுக்கு நிர்ணயித்த விலையில் வன்னி மாவட்டத்தில் கொள்வனவு இடம்பெறவில்லை. இது தொடர்பில் உடன் நடவடிக்கை எடுக்குமாறும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் கோரிக்கை விடுத்துள்ளார்.

விவசாய அமைச்சின் அமைச்சுசார் ஆலோசனைக்குழு கூட்டம் நேற்று நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

எங்களுடைய வன்னி தேர்தல் தொகுதியில் உள்ள மாவட்டங்களில், தை மாதம் முதலாவது கிழமை நெல் அறுவடை தொடங்கி இருக்கின்றது. ஆனால் விவசாயிகள் தங்களுடைய விளை பொருள்களை உரிய விலையில் விற்க முடியாமல் திண்டாடுகிறார்கள்.

அரசு நெல்லுக்கான விலையை நிர்ணயித்திருந்த போதிலும், தனியார் நிறுவனங்கள் ஒரு மூட்டை நெல்லை 6400 ரூபாவுக்குக் கொள்வனவு செய்கிறார்கள். ஒரு மூடை நெல்லானது ஏனைய மாவட்டங்களில் 64 கிலோகிராமாக இருக்கும்போது, எங்களுடைய பிரதேசங்களில் 75 கிலோகிராம் என்ற அடிப்படையில் கொள்வனவு இடம்பெறுகிறது.

அவ்வாறெனின் அரசின் ஆகக் குறைந்த விலை ஒரு கிலோ 120 ரூபாவாக உள்ளபோது எமது பிரதேசத்தில் 85 ரூபாவுக்குக் கொள்வனவு நடைபெறுகிறது. இதனை அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டுவருகின்றேன்.– என்றார்.

அதற்குப் பதிலளித்த அமைச்சர், உடனடியாக எதிர்வரும் திங்கட்கிழமை முதல் நெல் சந்தைப்படுத்தல் சபையினூடாக எங்களுடைய மாவட்டங்களில் நெல் கொள்வனவை ஆரம்பிப்பதாக உறுதி அளித்திருக்கிறார். இது மிக நல்ல விடயம். ஆகவே விவசாயிகளுக்கு இது ஒரு நல்ல செய்தியாக இருக்கும். – என்றார்.

இரண்டாவதாக, எங்களுடைய மாவட்டங்களில் வனவளத் திணைக்களம் 2014 ஆம் ஆண்டு கூகுள் வரைபடத்தின் அடிப்படையில் பொதுமக்களின் பெருமளவான காணியையும் அதே நேரத்தில் குளங்கள், வயல்களை வனவளத் திணைக்களத்துக்கு உரிய காணியாக அடையாளப்படுத்தி அங்கு மக்கள் தங்களது வாழ்வாதாரத்தைச் செய்ய முடியாத வகையில் தடுத்திருக்கிறார்கள். இந்த விடயம் தொடர்பாக நான் பேசியபோது பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய மாவட்டங்களிலும் இந்தப் பிரச்சினை இருப்பதாகவும், இது ஒரு தேசியப் பிரச்சினையாக இருப்பதாகவும் சொல்லியிருக்கிறார்கள்.

அரச நிதியில் திருத்தப்பட்ட குளங்கள் கூட வனவளத் திணைக்களத்தால் கையகப்படுத்தப்பட்டிருக்கின்றன. இது தொடர்பாக மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டத்திலும் நாங்கள் பேசியும் எந்தப் பயனும் ஏற்படவில்லை என்பதையும் அமைச்சரின் கவனத்துக்கு அறியப்படுத்துகின்றேன் என்றார் சத்தியலிங்கம் எம்.பி.

இதற்குப் பதிலளித்த அமைச்சர், இரண்டு தீர்வுகளை முன்மொழிந்திருந்தார். அதாவது வனவளத் திணைக்களம் மக்களுடைய காணிகளை அடையாளப்படுத்தி அவற்றை உடனடியாக மக்களுக்கு விடுவிக்க வேண்டும்.

இல்லாவிட்டால், அந்தக் காணி வனவளத் திணைக்களத்துக்கு அவசியமானதாகக் கருதப்படுகிற பட்சத்தில், இந்தக் கையகப்படுத்தப்பட்ட காணிகளுக்கான இழப்பீடுகளை மக்களுக்கு வழங்க வேண்டும் என்று சொல்லியிருந்தார்.

இதன்போது மீண்டும் கருத்துத்தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர், இடம்பெயர்ந்த மக்களுடைய காணிகள் வனவளத் திணைக்களத்தால் கையகப்படுத்தப்பட்டிருக்கிறது. அவர்கள் மீள்குடியேற்றத்துக்கு வரும்போது அந்தக் காணிகள் விடுதலை செய்யப்படாமல் இருக்கிறது, இதனால் பலருக்கு வீட்டுத் திட்டம் கூடக் கிடைக்காமல் போயிருக்கிறது. எனவே இவற்றை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்.– என்றார்.

அதேநேரம் புயலால் சேதமடைந்த வயல்களுக்கான இழப்பீடுகளையும், விவசாயிகளுக்கான இழப்பீடு, அதேபோல விவசாயிகளுக்கான உரமானியம் போன்ற இதுவரை கிடைக்காதது சம்பந்தமாகவும் சுட்டிக்காட்டப்பட்டது. அது தொடர்பாகவும் நடவடிக்கை எடுப்பார் என்றும் அமைச்சர் தெரிவித்திருந்தார்.

# ஆண்டின் சிறந்த விவரணக் கட்டுரையாளர் ஊடகவியலாளர் நூருல் ஹுதா உமருக்கு



ஆண்டின் சிறந்த விவரண கட்டுரை எழுத்தாளருக்கான "உபாலி விஜேவர்தன" சிறப்பு விருது தமிழன் பத்திரிகைக்காக ஊடகவியலாளர் நூருல் ஹுதா உமர் பெற்றுள்ளார். இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் மற்றும் பத்திரிகை ஆசிரியர் சங்கம் என்பன இணைந்து கொழும்பு மௌன்ட் லவ்னிய ஹோட்டலில் நடத்திய 26 ஆவது ஊடக விருது வழங்கும் வைபவத்தில் வைத்தே இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

"உபாலி விஜேவர்தன விருது" என்பது, இலங்கையின் ஊடகத் துறையில் தரமான விவரணக் கட்டுரைகளுக்கு வழங்கப்படும் ஒரு மதிப்புமிக்க தேசிய விருதாகும்.

பல்வேறு தேசிய, மாகாண, மாவட்ட, பிரதேச அளவில் கௌரவங்களையும், விருதுகளையும் பெற்றுள்ள இவர் ஊடகவியலாளர் என்பதையும் தாண்டி எழுத்தாளர், கவிஞர், அறிவிப்பாளர் என பன்முக ஆளுமை கொண்டவராவார்.



# அம்பாறை மாவட்டத்தில் கடுங்குளிர் பனியால் மக்கள் நோய்களால் பாதிப்பு

**(வி.ரி.சகாதேவராஜா)**

அம்பாறை மாவட்டத்தின் பல பிரதேசங்களில் கடந்த சில நாள்களாக காலை, மாலை மற்றும் இரவு வேளைகளில் கடுங்குளிர் நிலவுகிறது. கூடவே அதிக பனியும் பெய்து வருகிறது.

இதன் காரணமாக குழந்தைகள், சிறுவர்கள், முதியோர்கள் ஒருவகை இருமல், தடிமன், காய்ச்சல், உடல் வலிக்கு ஆளாகி வருகின்றதை அவதானிக்க முடிகின்றது.

மக்கள் தங்கள் அன்றாட கடமைகளை கூட மேற்கொள்ள முடியாதவாறு குளிரான காலநிலை நிவுகின்றது.

காலை மற்றும் மாலை, இரவு வேளைகளில் வெளியில் செல்பவர்கள் முகக் கவசம் அணிந்து செல்வது பாதுகாப்பானது எனவும், அவ்வாறான நேரங்களில் உடற்பயிற்சி செய்பவர்கள் அதனை தவிர்ப்பது நல்லது எனவும் வைத்தியர்கள் ஆலோசனை வழங்கியுள்ளனர்.

வளிமண்டத்தில் ஏற்பட்டுள்ள மாசுகளால் ஏற்படும் துகள் படிமங்களினாலேயே இவ்வாறான பனிபோன்று குளிரான காலநிலை ஏற்பட்டுள்ளது. எனவே பொது மக்கள் அவதானமாக இருப்பதுடன், பாதுகாப்புடன் செயற்படுமாறும் வைத்தியர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.




நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# மீளெழுச்சி இல்லை!

மிக மோசமான பொருளாதார நெருக்கடியில் வீழ்ந்து, தன்னுடைய கடன் கொடுப்பனவுகளை மீளச் செலுத்த முடியாமல் வங்குறோத்து நிலையை அடைந்த இலங்கை அந்த நெருக்கடி நிலையில் இருந்து இன்னும் மீண்டெழவில்லை.

சர்வதேச நாணய நிதியம் உதவுவதற்கு முன்வத்த காரணத்தினால், கடன் மீளளிப்பை 2028 ஆம் ஆண்டு வரைத் தள்ளி வைக்க இணங்கியிருக்கின்றன கடன் வழங்கிய நாடுகள். கடன் மீளளிப்பு கடப்பாடுகளை நிறைவு செய்ய வேண்டிய கட்டாயம் இப்போது இல்லாத காரணத்தினால் தற்சமயம் நாட்டின் நிதி நிலைமை ஓரளவுக்கு நெருக்கடி இல்லாமல் இருக்கின்றது. ஆனால் 2028 இலிருந்து பழைய கடன் நிலுவைகளைச் சேர்த்து மீள ஒழுங்கமைக்கப்பட்ட முறைமையில் அவற்றை திரும்பவும் செலுத்தத் தொடங்கும் கட்டாயம் வரும்போது நாட்டின் நிதி நிலைமை கழுத்தை இறுக்கும் என்பது தெளிவானது.

அதற்கிடையில் நாட்டின் பொருளாதாரத்தைத் தூக்கி நிறுத்தி, கடன் மீளளிப்புச் செய்யக்கூடிய நிலைக்கு நாட்டை மாற்றிக் கொள்ள வேண்டும். ஆனால் அந்தத் திசையை நோக்கி நாடு நகர்வதாக இல்லை.

இலங்கையின் பொருளாதார வளர்ச்சி இந்த ஆண்டு 3.5 சதவீதமாகவும், அடுத்த ஆண்டு 3.1 சதவீதமாகவும் குறையும் என்று உலக வங்கியின் சமீபத்திய அறிக்கை கூறுகிறது. நாட்டின் தயாரிப்புச் சந்தைகளில் உள்ள திறமையின்மை மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கான கட்டமைப்புத் தடைகள் மந்தநிலைக்கு வழிவகுக்கும் என்று அறிக்கை கூறியுள்ளது.

உலகளாவிய நிச்சயமற்ற தன்மைகள், பொருளாதார நெருக்கடியின் தொடர்ச்சியான தாக்கத்துடன் இணைந்து, இந்த ஆண்டும் அடுத்த ஆண்டும் பொருளாதார வளர்ச்சியில் மந்தநிலைக்கு வழிவகுக்கும் என்றும் உலக வங்கி தெரிவித்துள்ளது.

திறமையான தொழிலாளர்கள் வெளிநாடுகளுக்கு குடிபெயர்வதன் காரணமாக இலங்கை உட்பட பல நாடுகளை அது உயர் மட்டத்தில் பாதிக்கும் என்றும், இளைஞர் சமூகமும் சமூகத்தில் அதிக திறமையான வேலைகளைச் செய்பவர்களும் இந்த ஆண்டும் அடுத்த ஆண்டும் வெளிநாடுகளுக்கு அதிகம் குடிபெயர வாய்ப்புள்ளது என்றும் உலக வங்கி அறிக்கை கூறுகிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி விகிதத்தைக் கருத்தில் கொண்டால், இலங்கை இந்த ஆண்டு 4 முதல் 5 சதவீதம் வரையிலான பொருளாதார வளர்ச்சி விகிதத்தை எட்டும் என்று இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க முன்னர் கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால் தற்போதைய நிலைமைகள் மற்றும் பொருளாதார அவதானிப்புகள் நாடு அத்தகைய பொருளாதார மீளெழுச்சியை நோக்கி முன்நகரவேயில்லை என்பதை வெளிப்படுத்தி நிற்கின்றன.

நாட்டின் பொருளாதார வலிமையை மேம்படுத்தி, 2028 இல் வரக்கூடிய கடன் மீளளிப்பு நெருக்கடியை எதிர்கொள்வதற்கான தயார் நிலையை நோக்கி நாட்டை தேசிய மக்கள் மத்திய அரசு முன்நகர்த்துவதாக இல்லை என்பது தான் வேதனையான விடயமாகும்.





# 100 கூட்டல், கழித்தல் கணக்குகளுக்கு 2 நிமிடங்களில் பதிலளிக்கும் றிசோன்!

## சோழன் உலக சாதனை விருது வழங்கப்பட்டது

(வி.ரி.சகாதேவராஜா)

பெட்டி வடிவ 100 கூட்டல் 100 கழித்தல் கணக்குகளுக்கு 2 நிமிடம் 10 நொடிகளில் பதிலளிக்கும் மட்டக்களப்பு தாழங்குடா ரோமன் கத்தோலிக்க பாடசாலையில் 3 ஆம் ஆண்டில் கல்வி கற்கும் சாதனை மாணவன் றிசோன் ரோபட் கௌரவிக்கப்பட்டார்.

அதற்காக சாதனை மாணவன் றிசோன் ரோபட்டுக்கு சோழன் உலக சாதனை விருது வழங்கப்பட்டது.

இவர் சோழன் உலக சாதனை புத்தக நிறுவனத்தின் இலங்கை கிளையின் துணைச் செயலாளர் கதிரவன் த. இன்பராசா மற்றும் செயற் குழு உறுப்பினர் கவிஞர் அ. தனுராஜ் ஆகியோர் முன்னிலையில் இந்தச் சாதனையை படைத்துள்ளார்.

3 ஆம் ஆண்டில் கல்வி கற்கும் மாணவனான இவர் மட்டக்களப்பு தாளங்குடாவைச் சேர்ந்த ரோபட் ஞானமலர் ஆகியோரின் புத்திரராவார்.

இவரை பாராட்டி கௌரவித்து விருதுகளும், சான்றிதழ்களும்,பதக்கங்களும் வழங்கப்பட்டுள்ளன. மட்டக்களப்பு சார்ள்ஸ் மண்டபத்தில் நடைபெற்ற கௌரவிப்பு நிகழ்வில் அருட்தந்தை நவாஜி நவரெட்ணம், அருட்தந்தை மார்சல் மற்றும் அருட்தந்தைகள் அன்பு, சுகந்தன், அருட்சகோதரி தவசீலா மற்றும் பல அதிதிகளும் கலந்து கொண்டனர்.








# வேகக்கட்டுப்பாட்டை இழந்து வாகனம் விபத்துக்குள்ளானதில் மூவர் காயம்

(பூ.லின்ரன்)

வேகக் கட்டுப்பாட்டை இழந்து வாகனம் விபத்துக்குள்ளானதில் மூவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து இன்று காலை 9.30 மணியளவில் பரந்தன் பூநகரி வீதியில் இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சி நோக்கி பயணித்த வான் கட்டுப்பாட்டை இழந்து குடமுருட்டி பாலத்தில் மோதி குடைசாய்ந்துள்ளது.

விபத்துக்குள்ளான குறித்த வாகனத்தில் பயணித்த மூவர் காயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



# வடமராட்சி கிழக்கில் விபத்து; மூவர் வைத்தியசாலையில்

(பூ.லின்ரன்)

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிளில் விபத்தில் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

குடத்தனை பகுதியில் இன்று வியாழக்கிழமை காலை இரண்டு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின.

அதில் ஒரு மோட்டார் சைக்கிளில் மருதங்கேணி பிரதேச செயலக கணக்காளரும் சக உத்தியோகஸ்தரும் மற்றைய மோட்டார் சைக்கிளில் பயணித்த நபருமாக மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

விபத்தில் காயமடைந்தவர்கள் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். விபத்துத் தொடர்பிலான விசார ணைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# சட்டவிரோத கரைவலைத் தொழில்களைச் செய்ய ஊக்கப்படுத்தியோர் தொடர்பில் நடவடிக்கை தேவை!

## ரவிகரன் எம்.பி. வலியுறுத்து



(விஜயரத்தினம் சரவணன்)

சட்டவிரோத கரைவலைத் தொழில் முறையை மேற்கொள்வதற்கு கடந்த கால அரசுகளும், அமைச்சர்களும், அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்களும் கடற்றொழிலாளர்களை ஊக்கப்படுத்தியுள்ளனர் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவ்வாறு சட்டவிரோத கரைவலை முறைக்கு கடற்றொழிலாளர்களை ஊக்கப்படுத்தியோருக்கு எதிராக இந்த அரசு கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றில் உரையாற்றும் போதே நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.

இதன்போது அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கைகள் வடக்கு, கிழக்கு கடற்பரப்புகளில் இடம்பெற்றுவருகின்றன.

குறிப்பாக சுருக்குவலை, வெளிச்சம் பாய்ச்சி மீன்பிடித்தல், வெடிவைத்து மீன்பிடித்தல் போன்ற சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகள் இடம்பெற்றுவருகின்றன.

இந்த சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகள் வடக்கு, கிழக்கு கடற்பரப்பில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுவருவதைச் சுட்டிக்காட்டி, இத்தகைய சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளை கட்டுப்படுத்துமாறு தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றோம்.

அந்தவகையில் இத்தகைய சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தவேண்டும் என்ற நோக்குடன் கடற்றொழில் அமைச்சரும், பிரதி அமைச்சரும் செயற்பட்டு வருகின்றீர்கள் என்பதை நான் அறிவேன்.

நிச்சயமாக இவ்வாறான சட்டவிரோதக் கடற்றொழில் செயற்பாடுகளை மேற்கொள்ளும் எவராக இருப்பினும் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

கடந்த கால அரசுகள் சட்டவிரோத கரவலைத் தொழில் முறையை கடற்றொழிலாளர்கள் மேற்கொள்வதற்கு ஊக்கப்படுத்தி தவறான செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அவ்வாறு கடந்தகால அரசுகள் சட்டவிரோதமான கரவலை முறைகளை மேற்கொள்வதற்கு கடற்றொழிலாளர்களை அனுமதித்ததால்தான் தற்போது அந்த கடற்றொழிலாளர்கள் அவதிப்படுகின்றனர்.

இவ்வாறான சட்டவிரோதமான கரைவலைத் தொழில்முறைக்குக் கடற்றொழிலாளர்களை ஊக்கப்படுத்திய கடந்தகால அரசுகளுக்கு எதிராகவும், அமைச்சர்களுக்கு எதிராகவும், இதனோடு தொடர்புடைய அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு எதிராகவும் மிகக்கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேவேளை இந்த அரசு சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளை கட்டுப்படுத்த மேற்கொண்டுவரும் முயற்சிகளுக்கு நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன். - என்றார்.

# 210 லீட்டர் கசிப்புடன் ஒருவர் மஸ்கெலியாவில் கைதானார்!



210 லீட்டர் கசிப்புடன் ஒருவரை மஸ்கெலியா பொலிஸார் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று இரவு சாமிமலை பகுதியில் உள்ள ஸ்ரஸ்பி தோட்ட தெய்வகந்தை பிரிவில் உள்ள வன பகுதியில் இடம்பெற்றுள்ளது.

மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.எஸ். புஷ்பகுமார வின் வேண்டுகோளுக்கு இணங்க மஸ்கெலியா பொலிஸார் நேற்று இரவு சுற்றிவளைப்பை மேற்கொண்டனர்.

ஸ்ரஸ்பி தோட்ட தெய்வகந்தை பிரிவில் உள்ள வனப் பகுதியில் இடம்பெற்ற சுற்றிவளைப்பின்போது சட்ட விரோதமாக 210 லீட்டர் கசிப்புடன் சந்தேக நபர் கைது செய்யப்பட்டார் என மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.எஸ்.புஸ்பகுமார தெரிவித்தார்.

மீட்கப்பட்ட கசிப்பு அழிக்கப்பட்டது. சந்தேக நபர் பொலிஸ் பிணையில் விடுதலை செய்யபட்டுள்ளார். எதிர்வரும் புதன்கிழமை ஹட்டன் நீதிமன்றத்தில் முன் நிலையாகுமாறு நீதிவான் பணித்துள்ளார்.

மஸ்கெலியா பொலிஸ் பிரிவை இனிவரும் காலங்களில் போதைப் பொருள் இல்லாத பிரதேசமாக உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர் என்று பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புஷ்பகுமார மேலும் தெரிவித்தார்.



# சாய்ந்தமருது கிராம அபிவிருத்தி சங்கத்திற்கு மாகாண விருது!

(நவாஸ்)

சமூக முன்னேற்றத்துக்கான அர்ப் பணிப்பை கௌரவிக்கும் வகையில், கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தி சங்கத்தின் சிறப்பு விருது - 2025, சாய்ந்தமருது 08 ஆம் பிரிவு கிராம அபி விருத்தி சங்கத்துக்கு வழங்கப்பட்டது.

இந்த விருதை, பிரதேச செயலாளர் ஜனாப். எம். எம். ஆசிக், சங்கத்தின் தலைவரும், சாய்ந்தமருது பிரதேச செயலக பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத் தருமான ஏ.சி. முகம்மட்டிடம் உத்தியோக பூர்வமாக விருதை வழங்கி வைத்தார்.

இதன்போது பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஐ.எம். முகர்ரப், நிர்வாக கிராம உத்தியோகத்தர் எம்.எஸ்.எம்.நளீர் , அபிவிருத்தி உத்தி யோகத்தர் எம்.எம்.எப். பஸ்னா உள்ளிட் டோர் கலந்து கொண்டார்.



# பாரம்பரிய முறைமையைப் பறைசாற்றும் புதிர் எடுத்தல் நிகழ்வு தம்பலகாமத்தில்

(ஹஸ்பர் ஏ.எச்.)

பாரம்பரிய முறைமையைப் பறை சாற்றும் வகையில் வயல்களில் புதிர் எடுத்தல் நிகழ்வு தம்பலகாமத்தில்நேற்று இடம் பெற்றது.

திருகோணமலை மாவட்ட மேலதிக அரச அதிபரும் (காணி) தம்பலகாமம் பிரதேச பதில் பிரதேச செயலாளருமான ஜெ.ஸ்ரீபதி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வு புதுக்குடியிருப்பு பிரதேச வயல் நிலப் பகுதியில் இடம் பெற்றது.

நெல் அறுவடையின் போது பண்டைய முறைப்படி அறுவடை அங்குரார்ப் பண நிகழ்வு இதன்போது ஆரம்பிக் கப்பட்டது. இதில் தம்பலகாமம் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் இரா.பிர சாந்தன் உட்பட சக உத்தியோ கத்தர்களும் கலந்து கொண்டனர்.

# கிழக்கு மாகாண பாலர் பாடசாலைகளுக்கு தரம் குறைந்த தளபாடங்கள் விநியோகம்!

## இம்ரான் எம்.பி. குற்றச்சாட்டு



**(அபு அலா, ஹஸ்பர் ஏ.எச்.)**

ஊழலற்ற நாட்டை உருவாக்கும் வகையில் ஆட்சியை முன்னெடுத்துச் செல்வதாகக் கூறப்படும் தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் கிழக்கு மாகாண பாலர் பாடசாலைகளுக்கு மிகவும் தரம் குறைந்த தளபாடங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன என திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஊடகங்களுக்கு அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

2025 ஆம் ஆண்டு மாகாண அபிவிருத்தி நிதி மூலம், பல பாலர் பாடசாலைகளுக்கு தளபாடங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. இந்த தளபாடங்கள் மிகவும் தரம் குறைந்தவை. பிள்ளைகளுக்குப் பெரிதும் ஆபத்து விளைவிக்கக் கூடியவை என்று மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த சில பெற்றார் விநியோகிக்கப்பட்ட தளபாடங்களின் புகைப்படத்துடன் எனது கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளனர்.

விநியோகிக்கப்பட்டுள்ள தளபாடங்களின் புகைப்படங்களை அவதானிக்கும் போது உண்மையில் இந்தத் தளபாடங்கள் பணம் கொடுத்து கொள்வனவு செய்யப்பட்டனவா அல்லது எங்கோ கழித்து ஒதுக்கப்பட்டவையா என்ற கேள்வி எழுகின்றது.

தேசிய மக்கள் சக்தி அரசு ஊழலுக்கு எதிரான அரசு என்று மேடைகளிலும், பொது சபைகளிலும் உரத்த தொனியில் பேசப்படுகன்றது. இந்த அரசில்தான் இந்த ஊழல் மோசடி இடம்பெற்றுள்ளது.

கிழக்கு மாகாண பாலர் பாடசாலை பணியக தவிசாளர் மற்றும் பணிப்பாளர்களை கிழக்கு மாகாண ஆளுநர் தான் நியமித்துள்ளார். அப்படியாயின் இந்த நிர்வாகம் தேசிய மக்கள் சக்தி அரசின் நிர்வாகமாகும். இந்த நிர்வாகம் கொள்வனவு செய்து விநியோகித்துள்ள தளபாடங்களின் நிலைதான் இது.

இதுவா தேசிய மக்கள் அரசின் ஊழலற்ற ஆட்சி என்பதை பொதுமக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த அரசு சொல்வது போல் எதுவும் செய்வதில்லை என்பதற்கு மற்றுமொரு உதாரணம் இதுவாகும். இந்த ஆட்சியாளர்கள் தான் ஊழல் பேர்வழிகளை பதவிகளுக்கு நியமிக்கின்றார்கள். அவர்கள் ஊழல் செய்கின்றார்கள். இந்த நிலையில் எப்படி இவர்கள் ஊழலை ஒழிப்பார்கள்.

ஊழலை ஒழிப்பதாக இன்னும் எத்தனை நாள்களுக்குப் பொதுமக்களை இந்த அரசு ஏமாற்ற முடியும் எனக் கேட்க விரும்புகின்றேன்.

இந்தத் தளபாடக் கொள்வனவு மோசடியில் ஆளுநர் செயலகத்தை சேர்ந்தோருக்கும் பங்கு இருக்கலாம் என்ற சந்தேகம் தெரிவிக்கப்படுகின்றது. இந்தக் கொள்வனவு குறித்து உண்மையாக ஆராய்ந்தால் இந்த உண்மையையும் கண்டு பிடிக்க முடியும்.- என்றார்.

# யாழ். பழைய பூங்கா வீதி மறவர்குளத்தின் வாய்க்கால் தொடர்பில் முதல்வர் ஆராய்வு!



யாழ்ப்பாணம், பழைய பூங்கா வீதியில் உள்ள மறவர்குளத்தின் நீர் வாய்க்காலின் அணைக்கட்டை உடைத்து பாலம் அமைப்பதால் ஏற்படும் பாதிப்பு தொடர்பில் மாநகர முதல்வர் நேரில் சென்று ஆராய்ந்தார்.

மாநகர சபையிடம் கடந்த ஆண்டு மார்ச் மாதம் பெறப்பட்ட அனுமதியின் பெயரில் பாலம் அமைப்பதற்கான ஏற்பாட்டின்போது கொய்யாத்தோட்டத்தில் உள்ள மறவர்குளத்தில் இருந்து கடலுக்கு நீர் வெளியேறும் வாய்க்காலின் பாதுகாப்பு சுவர் முழுமையாக அழிக்கப்படுவதால் குளத்தின் பாதுகாப்பு அல்லது வாய்க்காலின் பாதுகாப்பு பாதிக்கப்படும் என்று அந்தப் பகுதி மக்கள் மாநகர சபையின் கவனத்துக்குக் கொண்டு சென்றதையடுத்தே மாநகர முதல்வர் மற்றும் ஆணையாளர் நேரில் சென்று பார்வையிட்டனர்.

இதன்போது கடை அமைக்கும்போது கடைக்கான போக்கு வரத்துக்கான பாலம் அமைப்பதற்காகவே இவ்வாறு வாய்க்காலின் பாதுகாப்புச் சுவர் முழுமையாக அழிக்கப்பட்டமை கண்டறியப்பட்டது.

இவற்றை ஆராய்ந்த மாநகர சபையினர், உடனடியாகப் பாதுகாப்புச் சுவரை அமைத்த பின்னர் ஏனைய பணிகளை முன்னெடுக்குமாறு காணி உரிமையாளருக்கு அறிவுறுத்தியதோடு பாலத்தின் பணிகள் தொடர்பிலும் மாநகர சபையின் ஆலோசனையை பெறுமாறு அறிவுறுத்தினர்.

# யாழ்ப்பாணத் தமிழர்களது வாழ்வியலைப் பேசும் பண்பாட்டுச் சுவடுகள்!

சண்சியா வரதராசன்,
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

யாழ்ப்பாணத் தமிழர்களின் வாழ்வியலும் பண்பாடுகளும் தனித்துவமான அடையாளங்களைக் கொண்ட ஒரு மரபுசார்ந்த பிணைப்பாகக் காணப்படுகின்றன. கல்வியிலும் ஆன்மீகத்திலும், விருந்தோம்பலிலும் சிறந்து விளங்கும் யாழ்ப்பாணக் குடாநாடு, பல்லாயிரம் ஆண்டு காலமாகத் தமிழ் மொழியையும், சைவ சமயத்தையும், அதற்குரிய கலை, கலாச்சார விழுமியங்களையும் பேணிப் பாதுகாத்து வருகின்றது. இங்குள்ள மக்கள் தமக்கேயுரிய தனித்துவமான வாழ்வியல் முறைகளாலும், நம்பிக்கைகளாலும், பழக்கவழக்கங்களாலும் சிறப்பிடம் வகிக்கின்றனர்.

அந்த வகையில், யாழ்ப்பாணத் தமிழர்களின் பண்பாட்டுச் சுவடுகள், சமயம், கல்வி, பாரம்பரிய வாழ்வியல், கலைகள், உணவுப் பழக்கவழக்கங்கள் ஆகியன சிறப்பாக நோக்கப்பட வேண்டிய அம்சங்களாகும்.

அந்த வகையில் யாழ்ப்பாணத் தமிழர்களின் வாழ்வின் அச்சாணிகளாக இருப்பது சைவ சமயமும், கிறிஸ்தவ சமயமுமாகும். இங்குள்ள மக்களின் எண்ணஙகள், செயல்கள், சடங்குகள், உறவுகள் என அனைத்தும் பெரும்பாலும் சமயம் சார்ந்தே பின்னப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் பல நூற்றாண்டுகள் பழமை வாய்ந்த கோயில்களும், ஆன்மீகப் பணிகளுக்கான மடங்களும் அதிகளவில் காணப்படுகின்றன. இந்தக் கோயில்கள் வெறும் வழிபாட்டுத் தலங்களாக மட்டுமின்றி, கலை, கல்வி, சமூக ஒன்றிணைவு மையங்களாகவும் செயற்படுகின்றன.

மேலும் பிறப்பு முதல் இறப்பு வரையிலான வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் சடங்குகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. காது குத்துதல், பூப்புனித நீராட்டு விழா, திருமணம், இறுதிக் கிரியைகள் போன்றன யாழ்ப்பாணத் தமிழரின் தனித்துவமான சடங்குக் கோலங்களைக் காட்டுகின்றன.

அத்தோடு செல்வச் செழிப்புள்ளவர்கள் ஆலயங்கள் அமைப்பதற்கும், ஸ்தாபனங்கள், கல்விச் சாலைகள் நிறுவுவதற்கும் பணத்தை வாரி வழங்குவது இவர்களின் ஆன்மீகப் பங்களிப்பைக் காட்டுகிறது.

மேலும் கல்விக்கு யாழ்ப்பாணத் தமிழர்கள் அளித்த முக்கியத்துவம் உலகறிந்த ஒன்றாகும். யாழ். மாவட்டமானது கல்வி, அறிவியல் துறைகளில் பல மேதைகளை உருவாக்கி, தேசியப் பொருளாதார வளர்ச்சியில் நடுநாயகமாகத் திகழ்கிறது.

குறிப்பாக யாழ்ப்பாணத்தில் உள்ள பாடசாலைகள், பல்கலைக் கழகங்கள் ஆகியவை பாரம்பரியக் கல்வி முறையையும் நவீன அறிவியலையும் இணைத்து பல தலைமுறையினரை உருவாக்கியுள்ளன.

அத்தோடு யாழ்ப்பாணத் தமிழர்கள் தமிழ் மொழியின் மீதும் தமிழ்த் தொண்டின் மீதும் மிகுந்த பற்று கொண்டவர்கள். அவர்களது பேச்சுத் தமிழ் தனித்துவமான உச்சரிப்புகளையும், வழக்கங்களையும் கொண்டுள்ளது.

யாழ்ப்பாண மக்களின் வாழ்வியல் முறையானது, அவர்களின் புவியியல் நிலை மற்றும் காலனிய ஆட்சிப் பின்னணியால் வடிவமைக்கப்பட்ட தனித்துவமான அம்சங்களைக் கொண்டுள்ளது.

பாரம்பரிய யாழ்ப்பாண வீடுகள் அதன் பிரத்தியேகமான கட்டடக் கலையைக் கொண்டுள்ளன. முற்றம், சமையலறை, நாச்சியார் அமைப்பு என ஒவ்வொன்றும் ஒரு குறிப்பிட்ட பயன்பாட்டையும், கலாச்சார மதிப்பையும் பிரதிபலித் தன.

இன்றும் கிராமிய வழக்காறுகளில் தொட்டுணராச் சடங்குகளின் வகிபாகம் காணப்படுகின்றன. இவை சமுதாய ஒழுங்கமைப்பிலும், உளவியல் நம்பிக்கைகளிலும் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

யாழ்ப்பாணத் தமிழரின் பாரம்பரிய ஆடை, அணிகலன்களும் தனித்துவமானவை. பின்காலனித்துவச் சூழலிலும் மரபார்ந்த நெறிமுறைகளை பேணும் வகையில் ஆடைப் பழக்கவழக்கங்கள் உள்ளன. உதாரணமாக, பெண்கள் அணியும் ஆபரணங்கள், நெற்றிப் பொட்டு, ஆண்களின் வேட்டி மற்றும் சால்வை போன்றவை குறிப்பிடப்படத் தக்கன.

கலைகள் யாழ்ப்பாணத் தமிழர்களின் வாழ்வியலில் ஊடும் பாவுமாகப் பின்னிப் பிணைந்துள்ளன. யாழ்ப்பாணத்து நிகழ்த்து கலைகளில் கூத்துக்கலை முக்கியமானது. இது சமயம் சார்ந்தும், சமூகக் கதைகள் சார்ந்தும் நிகழ்த்தப்படுகின்றது. மேலும் தேவாரப் பாடல்கள், பஜனைகள், புராண நாடகங்கள் போன்றவை கோயில் திருவிழாக்களை சார்ந்து நிகழ்த்தப்படும் கலைகளாகும்.

யாழ்ப்பாண மக்களின் உணவுப் பழக்கவழக்கங்கள் சுவையையும், ஆரோக்கியத்தையும் கொண்டவையாக காணப்படுகின்றன. பனங்கிழங்கு, ஒடியற் கூழ், பிட்டு, இடியப்பம், அடை போன்றவை யாழ்ப்பாணத்து உணவுப் பழக்கவழக்கங்களில் முக்கியமானவையாகும்.. இவை பெரும்பாலும் உள்ளூரில் கிடைக்கும் பொருள்களைக் கொண்டு தயாரிக்கப்படுகின்றன.

விருந்தினரை உபசரிப்பதில் யாழ்ப்பாணத் தமிழர் மிகுந்த ஆர்வம் கொண்டவர்கள். பாரம்பரிய முறைப்படி உபசரணைகள் நடைபெறும். எனினும், நாகரிக வளர்ச்சியும், மேற்கத்தேய கலாச்சாரத் தாக்கமும் இப்போது உணவுப் பழக்கவழக்கங்களில் சிறிய மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றன.

எனவேதான் யாழ்ப்பாணத் தமிழர் வாழ்வியல் பண்பாட்டுச் சுவடுகள் என்பவை வெறும் வரலாற்றுக் குறிப்புகள் அல்ல. அவை இன்றும் உயிர்ப்புடன் இயங்கும் ஒரு தனித்துவமான மரபு. சைவ சமயத்தின் ஆழமான பிணைப்பு, கல்விக்கு அளித்த முதன்மை, பாரம்பரிய வாழ்வியல் ஒழுங்குகள், செழுமையான கலை வடிவங்கள், தனித்துவமான உணவுப் பழக்கவழக்கங்கள் ஆகியவை யாழ்ப்பாணப் பண்பாட்டை உலகத்தவர்களால் போற்றப்படும் அளவுக்கு உயர்த்தியுள்ளன.

நவீனத்துவத்தின் தாக்கம் மற்றும் புலம் பெயர்தல் போன்ற சவால்களுக்கு மத்தியிலும், யாழ்ப்பாணத் தமிழர் தமது மரபார்ந்த ஒழுங்கமைவில் வாழ்ந்து கொண்டிருப்பது, அவர்களின் பண்பாட்டின் தன்மையை காட்டுகிறது. இந்தப் பண்பாட்டுச் சுவடுகளை அடுத்த தலைமுறையினருக்குக் கொண்டு செல்வது இச்சமூகத்தின் முக்கிய கடமையாகும்.

# சர்வாதிகாரப் போக்குடன் நடக்கும் தி.மு.க. அரசு

## எடப்பாடி பழனிசாமி கண்டனம்



தி.மு.க. அரசு சர்வாதிகாரப் போக்குடன் நடந்து கொள்கிறது என அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் கறிக்கோழி விவகாரம் தொடர்பாக அ.தி.மு.க. கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டு வந்தது. பின்னர் இந்த கவன ஈர்ப்பு தீர்மானத்தை எடுக்க வலியுறுத்தி சட்டப்பேரவையில் அ.தி.மு.க. எம்.எல்.ஏக்கள் அமளியில் ஈடுபட்டனர்.

ஆனால் முதல்வர் ஸ்டாலின், "கறிக்கோழி விவகாரம் குறித்து சம்மந்தப்பட்ட அதிகாரிகள் அமைச்சர்களிடம் கலந்தாலோசித்த பிறகு, இது குறித்து விவாதிக்கலாம்" என்றார்.

இதனை ஏற்காத அ.தி.மு.கவினர் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டு, வெளிநடப்பு செய்தனர்.

இதனைத் தொடர்ந்து அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி செய்தியாளர்களிடம் பேசும்போது,

"மூலப்பொருள்கள் விலை உயர்வால் கறிக்கோழி பண்ணையில் பணிபுரியும் 5 லட்சம் தொழிலாளர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். கறிக்கோழி வளர்ப்பு தொழிலில் ஈடுபட்டுள்ளோருக்கு கூலி உயர்வு வழங்க தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கறிக்கோழி விவகாரம் குறித்து பேச அனுமதிக்கவில்லை, தி.மு.க. அரசாங்கம் சர்வாதிகார போக்குடன் நடந்து கொள்கிறது.

இது 40 ஆயிரம் விவசாய குடும்பங்களின் பிரச்சினை, 5 லட்சம் தொழிலாளர்களின் பிரச்சினை. மக்களின் பிரச்சினையை அரசின் கவனத்துக்கு கொண்டுவர கூட அனுமதி மறுத்தால் என்ன செய்வது? அரசாங்கம் இரு தரப்பிலும் பேசி சுமூகமான தீர்வு காண வேண்டும்.

அதேபோல், தி.மு.க. பொறுப்பேற்றதிலிருந்து நுளம்பு பெருகுவதை தடுப்பதில் கவனம் செலுத்தவில்லை. நுளம்பால் பல்வேறு நோய்கள் மக்களை தாக்குகின்றன. தமிழகத்தில் சென்னை, காஞ்சிபுரம், தென்காசி, தேனி, கடலூர், அரியலூர் உட்பட பல மாவட்டங்களில் சிக்கன் குனியா ஏற்பட்டு மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தனிவார்டுகள் அமைத்து சிகிச்சை வழங்க வேண்டும்.

சிக்கன் குனியா ஏற்பட்டால் உயிருக்கே ஆபத்து ஏற்படும் சூழல் அமையும். இது குறித்து தான் பேச அனுமதி கேட்டோம். ஆனால் அனுமதி மறுத்துவிட்டனர், அதனால்தான் வெளிநடப்பு செய்தோம்.

அ.தி.மு.கவின் தேர்தல் அறிக்கை மக்களிடையே பெரும் வரவேற்பு பெற்றுள்ளது. அந்த எரிச்சலில்தான் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு அமைச்சரும் ஒவ்வொரு விதமாக பதிலளித்து வருகிறார்கள்.

தி.மு.க. ஆட்சி அமைந்ததிலிருந்து சட்டம் - ஒழுங்கு சீர்கெட்டுவிட்டது. இதற்கு முழுக்க முழுக்க காரணம் போதைப் பொருள் விற்பனை தான். அதை தடுக்க இயலாத அரசாக உள்ளது. இத்தனை நிகழ்வுகள் நடைபெறுவதெல்லாம் போதை ஆசாமிகளால் தான். அதுவும் கஞ்சா போதை ஆசாமிகளால் தான். 20 நாள்களில் 46 போக்சோ வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

ஒவ்வொரு மாதமும் பெண்களும், சிறுமிகளும் பாதிக்கப்படுகிறார்கள். அதை கட்டுப்படுத்த இந்த அரசால் முடியவில்லை. இதற்கு காரணம் நிரந்தர சட்ட ஒழுங்கு டி.ஜி.பி. நியமிக்கப்படாதது தான். அ.தி.மு.க. ஆட்சியில் பல்வேறு போராட்டங்கள் நடந்தன. திமுகவை போன்று அடக்குமுறை எங்களது ஆட்சியில் இல்லை.

தற்போது எதிர்கட்சிகள் போராட்டம் நடத்தினாலும், அனுமதி கொடுப்பதில்லை. அப்படி போராடினாலும் எங்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்படுகிறது.

வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமல் இருப்பதால் விவசாயிகளில் இருந்து அனைவரும் போராடி வருகிறார்கள். ஆறு மாதமாக போராட்டங்கள் நடைபெறுகின்றன. இது அரசாங்கத்துக்கு தெரியாதா? இந்த ஆட்சி அகற்றப்பட வேண்டிய ஆட்சி. போராடுபவர்களை தி.மு.க ஒடுக்கப்பார்க்கிறது." என்று தெரிவித்துள்ளார்.

# உரையை முழுமையாக வாசிக்காமலேயே ஆளுநர் வெளியேறியமையால் குழப்பம்



கர்நாடக சட்டப்பேரவையின் கூட்டுக் கூட்டத்தில் ஆளுநர் உரையை, ஆளுநர் தாவர்சந்த் கெலாட் முழுமையாக வாசிக்காமல் வெளியேறியதால் குழப்பம் ஏற்பட்டது.

ஆண்டின் முதல் கூட்டத் தொடர் தொடங்குவதை முன்னிட்டு கர்நாடக சட்டப்பேரவையின் கூட்டுக் கூட்டத்தில் ஆளுநர் தாவர்சந்த் கெலாட் இன்று உரை நிகழ்த்துவதாக இருந்தது. சட்டப்பேரவை கூட்டுக்கூட்டம் கூடியதும், ஆளுநர் உரையின் முதல் மற்றும் இறுதி வரிகளை மட்டுமே வாசித்துவிட்டு ஆளுநர் தாவர்சந்த் கெலாட் சட்டப்பேரவையில் இருந்து வெளியேறினார்.

அப்போது, ஆளுநரை தடுத்து நிறுத்திய காங்கிரஸ் மூத்த தலைவர் ஹரிபிரசாத், உரையை முழுமையாக வாசிக்குமாறு கேட்டுக்கொண்டார். எனினும், அந்த கோரிக்கையை ஏற்க ஆளுநர் மறுத்துவிட்டார்.

இதையடுத்து, காங்கிரஸ் எம்.எல்.ஏக்களும் எம்.எல்.சிக்களும் ஆளுநரின் செயலைக் கண்டித்து முழக்கங்களை எழுப்பினர். இந்த சம்பவம் குறித்துப் பேசிய கர்நாடக அமைச்சர் பிரியங்க் கார்கே,

"ஆளுநர் உரையை ஆளுநர் வாசிப்பது அரசமைப்புக் கடமை. அவர் ஏன் அதில் இருந்து பின்வாங்குகிறார் என்று எனக்குத் தெரியவில்லை. ஒரு பந்தி பொய்யாகவோ அல்லது கற்பனையாகவோ இருந்தால் கூட, அதை வாசிக்க வேண்டாம். ஆளுநர் உரையின் 11 பந்திகளும் ஏற்கனவே பொதுவெளியில் விவாதிக்கப்பட்டு வருகின்றன.

அதே பந்திகள், பிரதமர், நிதி அமைச்சர், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இதில் என்ன தவறு இருக்கிறது? ஆளுநருக்கு கர்நாடக மக்கள் மீது அக்கறை இல்லை என்றால், அவர் எங்கு வேண்டுமானாலும் செல்லலாம்." என்று கூறினார்.

# ஐரோப்பா மீதான 10 வீத வரி விதிப்பை திரும்பப் பெற்றார் டொனால்ட் ட்ரம்ப்

ஐரோப்பிய நாடுகள் மீது விதிக்கப்பட இருந்த 10 சதவீத மேலதிக வரி திட்டத்தைக் கைவிடுவதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

முன்னதாக, கிரீன்லாந்தைக் கைப்பற்றும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் ஐரோப்பிய நாடுகளின் மீது 10 சதவீத மேலதிக வரி விதிப்பதாக அவர் எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இதன்படி, கிரீன்லாந்தை அமெரிக்காவிடம் ஒப்படைக்க மறுக்கும் டென்மார்க், ஸ்வீடன், பிரான்ஸ் மற்றும் ஜெர்மனி உள்ளிட்ட எட்டு நாடுகள் மீது எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி முதல் இந்த மேலதிக வரி விதிக்கப்படும் என ட்ரம்ப் எச்சரித்தார்.




இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் ஐரோப்பிய ஒன்றியம் தமது அழுத்த எதிர்ப்பு கருவியைப் பயன்படுத்தி அமெரிக்கா மீது பொருளாதாரத் தடைகளை விதிப்பது குறித்து ஆலோசித்து வருகிறது.

இந்தநிலையிலேயே, ஐரோப்பிய நாடுகள் மீது விதிக்கப்பட இருந்த 10 சதவீத மேலதிக வரி திட்டத்தைக் கைவிடுவதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.



# பாக். தீ விபத்தில் பலியானோர் எண்ணிக்கை 61 ஆக அதிகரிப்பு

பாகிஸ்தானின் கராச்சி நகரில் எம்.ஏ. ஜின்னா வீதியில் வணிக வளாகத்தில் இடம்பெற்ற தீ விபத்தில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 61 ஆக அதிகரித்துள்ளது.

கடந்த சனிக்கிழமை இரவு வணிக வளாகத்தில் திடீரென தீ விபத்து ஏற்பட்டது. அதில் மொத்தம் மற்றும் சில்லறை விற்பனை செய்யப்படும் கடைகள் உட்பட கட்டடத்தின் 03 தளங்களிலும் தீ பரவியது.

இதுபற்றி கராச்சி நகர தெற்கு பகுதிக்கான பொலிஸ் திணைக்கள டி.ஐ.ஜி. சையது ஆசாத் ரசா தெரிவிக்கையில்,

“ஒரு கடையில் இருந்து மட்டுமே 30 பேரின் உடல்கள் மீட்கப்பட்டன. இது தவிர 03 உடல்கள் மீட்கப்பட்டன. இதனால்,




உயிரிழப்புக்களின் எண்ணிக்கை 31 ஆக அதிகரித்தது.

ஒட்டுமொத்த உயிரிழப்புக்களின் எண்ணிக்கை 61 ஆக அதிகரித்துள்ளது. எனினும், மரபணு பரிசோதனை அறிக்கைகளின் முடிவிலேயே இறுதியான விவரங்கள் உறுதிப்படுத்தப்படும் என தெரிவித்துள்ளார்.

ஒரு கடையில் ஏற்பட்ட மின் கசிவால் தீ பிடித்து, அது பல்வேறு கடைகளுக்கும் பரவியுள்ளது.” என தெரிவித்துள்ளார்.




## நியூசிலாந்தில் மண்சரிவு:

# முகாமில் தங்கியிருந்தவர்கள் மண்ணுக்குள் புதைந்தனர்

நியூசிலாந்தின் வடக்குத் தீவில் பெய்த வரலாறு காணாத கனமழை மற்றும் சூறாவளியால் ஏற்பட்ட மண் சரிவில் சிக்கி, ஒரு சிறுமி உட்பட பலரைக் காணவில்லை என அஞ்சப்படுகிறது.

ஐந்து பிராந்தியங்களில் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

மவுண்ட் மௌங்கனுய் பகுதியில் உள்ள சுற்றுலாப் பயணிகள் தங்கும் முகாம் ஒன்றில் வியாழக் கிழமை காலை மிகப்பெரிய மண்சரிவு ஏற்பட்டது.

அவசரகாலத் துறை அமைச்சர் மார்க் மிட்செல் இதனை விவரிக்கும்போது, "பாதிக்கப்பட்ட பகுதிகள் ஒரு போர் மண்டலத்தைப் போலக் காட்சியளிக்கின்றன" என்று கவலையுடன் தெரிவித்தார்.

முகாம் பகுதியில் மண்ணுக்குள் புதைந்தவர்களிடமிருந்து உதவி கோரும் குரல்கள் கேட்டதாகத் தீயணைப்புத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

மாயமானவர்களில் ஒரு சிறுமியும் அடங்குவதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வெள்ளம் சூழ்ந்த பகுதிகளில் வீடுகளின் கூரைகள் மீது தஞ்சமடைந்திருந்த குடும்பங்களை மீட்புப் படையினர் உலங்கு வானூர்திகள் மூலம் மீட்டு வருகின்றனர்.

மண்சரிவு ஏற்படுவதற்கு முந்தைய 30 மணிநேரத்தில் தவுரங்கா நகரில் மட்டும் 295 மி.மீ மழை பதிவாகியுள்ளது.

மவுண்ட் மௌங்கனுய் தவிர, பாப்ப மோவா மற்றும் ஆக்லாந்திற்கு அருகிலுள்ள பகுதிகளில் நிலச்சரிவு மற்றும் ஆற்று வெள்ளத்தால் பலர் மாயமாகியுள்ளனர்.

மண் ஏற்கனவே அதிகளவு ஈரப்பதத்துடன் காணப்படுவதால், மேலும் மழை பெய்தால் மரம் விழுதல் மற்றும் கூடுதல் மண்சரிவுகள் ஏற்படக்கூடும் என தேசிய அவசரகால மேலாண்மை முகமை எச்சரித்துள்ளது.










பக்கங்கள் - 03

கனடா முரசு


வியாழக்கிழமை 22/01/2026

பல ஆண்டுகளாக விமானியாக நடித்து ஏமாற்றிய நபர் கைது



C3▶

# கனடாவில் போலி மருந்துகள் விற்பனை; சுகாதார திணைக்களம் கடும் எச்சரிக்கை




கனடா முழுவதும் உள்ள பல்வேறு விற்பனை நிலையங்கள் மற்றும் 'ஒன்லைன்' தளங்களில், ஓசெம்பிக் மற்றும் மௌன்ஜாரோ ஆகிய மருந்துகளின் போலி பதிப்புகள் விற்பனை செய்யப்படுகின்றன என கனடிய சுகாதார திணைக்களம் பொதுமக்களுக்கு கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

GLP-1 வகை மருந்துகளின் அனுமதியற்ற பதிப்புகள் - குறிப்பாக செமாக்ளூடைடு அடங்கிய ஒசெம்பிக், ரைபெல்சஸ், வெகோவி போன்ற பிரபல மருந்துகளின் போலி வடிவங்கள் கடைகளிலும் இணையத்திலும் விற்பனை செய்யப்படுவதாக எச்சரிக்கை விடுத்துள்ளது.

சில இணையதளங்களும் சமூக ஊடக விளம்பரங்களும், ஹெல்த் கனடாவின் அதிகாரப்பூர்வ லோகோக்களை தவறாக பயன்படுத்தி, போலி அங்கீகாரங்களை காட்டி, நுகர்வோர்களை ஏமாற்றுகின்றன என அந்த அமைப்பு எச்சரித்துள்ளது. C2▶

# பொருளாதார பலத்தை ஆயுதமாக மாற்றும் உலக நாடுகளுக்கு கனடா பிரதமர் கண்டனம்

இராணுவ மற்றும் பொருளாதார பலம் கொண்ட நாடுகள், அவற்றை ஏனைய நாடுகளுக்கு எதிரான ஆயுதங்களாகப் பயன்படுத்தி வருவதாக கனேடிய பிரதமர் மார்க் கார்னி தெரிவித்துள்ளார்.

இந்த நாடுகள், வரி விதிப்பு, தடை விதிப்பது, பொருள்கள் விநியோகத் தொடர்பைத் துண்டிப்பது என தங்களுடைய பலத்தைக் காட்டுவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

சுவிட்சர்லாந்தின் டாவோஸ் நகரில் நடைபெற்றுவரும் உலகப் பொருளாதார மாநாட்டில் உரையாற்றும் போது கனேடிய பிரதமர் மார்க் கார்னி இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.




அத்துடன், உணவு, எரிசக்தி, பாதுகாப்பு உள்ளிட்டவற்றில் சுய தேவையை நிறைவேற்றிக்கொள்ள முடியாத நாடுகள், பலம் பொருந்திய நாடுகளின் அழுத்தத்துக்கு ஆளாகுவதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்தநிலையில், பலமிக்க நாடுகளின் நிர்ப்பந்தத்துக்குக் கட்டுப்பட வேண்டிய கட்டாயத்துக்கு ஏனைய நாடுகள் தள்ளப்படுவதாகவும் கனேடிய பிரதமர் மார்க் கார்னி தெரிவித்துள்ளார்.

# கனடா ஈகை அறக்கட்டளையின் அனுசரணையில் மன்னார் மக்களுக்கு உலருணவும் நுளம்பு வலையும்














வடக்கு – கிழக்கு மறுவாழ்வு அமைப்பின் ஒழுங்கமைப்பில், கனடா ஈகை அறக்கட்டளையின் அனுசரணையில் மன்னார் கற்கிடந்தகுளம் பகுதியில் வசிக்கும் 50 குடும்பங்களுக்கு உலருணவு பொதிகளும் நுளம்பு வலைகளும் வழங்கப்பட்டன.

இந்தச் செயற்றிட்டம், அண்மைக் காலமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அதிகரித்துவரும் சிக்குன் குனியா நோய்த் தாக்கத்தை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்ட சமூக நல உதவித் திட்டமாகும்.

இதேவேளை, வவுனியா மாவட்ட தாண்டிக்குளம் பகுதியில் அமைந்துள்ள இலங்கை தமிழரசுக் கட்சியின் மக்கள் தொடர்பகத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் பி.சத்தியலிங்கம் ஒழுங்குபடுத்தலில் 50 கர்ப்பிணி தாய்மாருக்கான நுளம்பு வலைகள் வழங்கப்பட்டன.

நுளம்புக் கடியால் ஏற்படும் தொற்று நோய்கள், சிக்குன்குனியா, டெங்கு, மலேரியா போன்ற நோய்கள் தொடர்பாக கர்ப்பிணி பெண்களுக்கு விசேட சுகாதார விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்வும் இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக செயல்படுத்தப்பட்டது.

இந்த நிகழ்வுகளில் வடக்கு – கிழக்கு மறுவாழ்வு அமைப்பின் இயக்குநர் எஸ். சுகிர்தன், இலங்கை தமிழரசுக் கட்சியின் மன்னார் மற்றும் வவுனியா மாவட்ட கிளை நிர்வாகிகள், அமைப்பின் பணிப்பாளர்கள், உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

அமைப்பின் தகவலின்படி, வடக்கு – கிழக்குப் பகுதிகளில் சமூக சுகாதார பாதுகாப்பும் வறுமைப் பாதிப்பு குறைப்பும் நோக்கமாக இதுபோன்ற நலத் திட்டங்கள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் எனவும் ஏற்பாட்டாளர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## கனடாவில் போலி...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த அனுமதியற்ற மருந்துகள் பாதுகாப்பு, செயல்திறன் மற்றும் தரம் ஆகியவற்றில் மதிப்பாய்வு செய்யப்படாததால், அவை மிகவும் ஆபத்தான உடல் நல அபாயங்களை ஏற்படுத்தக்கூடும் என்றும் அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில ஆண்டுகளில், உடலில் இயற்கையாக சுரக்கும் GLP-1 ஹார்மோனை பின்பற்றி செயல்படும் இந்த மருந்துகளின் பயன்பாடு வேகமாக அதிகரித்துள்ளது. இவை வகை-2 நீரிழிவு நோயாளிகளின் இரத்த சர்க்கரை அளவை கட்டுப்படுத்தவும், உடல் பருமன் சிகிச்சைக்கும் பயன்படுத்தப்படுகின்றன.

அனுமதியற்ற அல்லது போலி ஊசி மூலம் செலுத்தப்படும் மருந்துகள், ஸ்டெரிலைசேஷன் இல்லாமை காரணமாக தொற்றுகள், அலர்ஜி எதிர்வினைகள் மற்றும் தவறான கையாளல் அல்லது மாசுபாடு காரணமாக தீவிர உடல்நல பாதிப்புகளை ஏற்படுத்தும் அபாயம் அதிகம் என அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

எனவே அனுமதியற்ற மருந்துகளை வாங்கவோ பயன்படுத்தவோ கூடாது என்றும் அந்த அறிவிப்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், அனுமதியற்ற மருந்துகளை விற்பனை செய்வதும், நோய்களுக்கு சிகிச்சை அளிக்கும் என பொய் அல்லது தவறான விளம்பரங்கள் செய்வதும் கனடாவில் சட்டவிரோதம் என விற்பனையாளர்களுக்கும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.




# கனடாவின் சிறந்த வேலை வழங்குநர்கள் பட்டியலில் இடம்பிடித்த 'பிம்போ கனடா'

கனடாவின் மிகப்பெரிய மற்றும் பழமையான வெதுப்பக நிறுவனமான பிம்போ கனடா, 2026 ஆம் ஆண்டிற்கான ஃபோர்ப்ஸ் இதழின் "கனடாவின் சிறந்த வேலை வழங்குநர்கள்" பட்டியலில் இடம்பிடித்துப் பெருமை சேர்த்துள்ளது.

ஃபோர்ப்ஸ் இதழும், உலகப்புகழ் பெற்ற புள்ளிவிபரத் தளமான ஸ்டாடிஸ்டா வும் இணைந்து மேற்கொண்ட விரிவான ஆய்வின் முடிவில் இந்தத் தரவரிசை வெளியிடப்பட்டுள்ளது.

500 க்கும் மேற்பட்ட ஊழியர்களைக் கொண்ட பல்வேறு நிறுவனங்களில் பணியாற்றும் 37,000 க்கும் அதிகமான ஊழியர்களிடம் நடத்தப்பட்ட சுதந்திரமான வாக்கெடுப்பின் அடிப்படையில் இந்தத் தெரிவு இடம்பெற்றுள்ளது.


குறிப்பாக, ஊழியர்கள் தங்கள் பணிச் சூழல் குறித்து வழங்கிய நேரடி கருத்துக்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டு இந்த மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 2023ஆம் ஆண்டைத் தொடர்ந்து, இரண்டாவது முறையாக இந்த கௌரவத்தை பிம்போ கனடா பெற்றுள்ளது.

இது குறித்து நிறுவனத்தின் மனித வளத் துறை துணைத் தலைவர் லெஸ்லீ வில்ஸ் கருத்துத் தெரிவிக்கையில்,

"எங்கள் நிறுவனத்தில் பணியாற்றும் ஊழியர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் 'மக்களுக்கு முன்னுரிமை' எனும் எமது ஆழமான கலாசாரத்திற்கு கிடைத்த மிகப்பெரிய அங்கீகாரம் இதுவாகும்." என மகிழ்ச்சி வெளியிட்டுள்ளார்.

சுமார் 114 ஆண்டுகளுக்கும் மேலான வரலாற்றைக் கொண்ட பிம்போ கனடா, கனடாவின் உணவுத் துறையில் தவிர்க்க முடியாத ஒரு பெயராகும்.



# பல ஆண்டுகளாக விமானியாக நடித்து ஏமாற்றிய நபர் கைது

கனடாவில், பல ஆண்டுகளாக விமான விமானியாக நடித்து ஏமாற்றிய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கனடாவின் ரொரன்றோவைச் சேர்ந்த முன்னாள் விமானப் பணியாளரான டல்லாஸ் (33) என்பவர், போலி அடையாள அட்டை மூலம் விமானியாக நடித்து ஏமாற்றியமை தெரியவந்துள்ளதாக அமெரிக்க அட்டர்னி ஜெனரல் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இப்படி அவர் விமானி போல நடித்து ஏமாற்றியது, விமானம் செலுத்துவதற்கு அல்ல. விமானங்களில் பணியில் இல்லாத விமானிகள் அமர்ந்து பயணிப்பதற்கான இருக்கைகளை இலவசமாக பெறும் சலுகைக்காகவே டல்லாஸ் இப்படி ஏமாற்றிவந்துள்ளார்.

கைது செய்யப்பட்டுள்ள டல்லாஸ் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படுமானால், அவருக்கு 20 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்படலாம் என்பதுடன், 250,000 டொலர்கள் அபராதமும் விதிக்கப்படக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.